REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 26உ புதன் (11—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 27உ வியாழன் (12—12—57) [இதழ் 154

நேர்மையே நேர்மை!

புதுடில்லி, டிச. 11—

ஒரு பத்திரிகையின் மதிப்பு, அச்சிடப்படும் பிரதிகளின் எண்ணிக்கை, முதலியவற்றைக் கவனித்து அரசாங்க விளம்பரங்கள் தரப்படுகிறதாம்!

அரசியல் கருத்து வேறுபாடு இதில் குறுக்கிடுவதில்லையாம்!

மஞ்சள் இதழ்கள், வகுப்புவாத ஏடுகளுக்கு மட்டுமே விளம்பரங்கள் அளிக்கப்படுவதில்லையாம்!

மத்திய அரசாங்க விளம்பர அமைச்சர் கேஸ்கர் மக்கள் சபையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. யாருக்கும் என்றும் கையாளாக இராது

மிரட்டலுக்கு மிரள்வதுமில்லை; ஆசை காட்டினுல் மயங்குவதுமில்லை

நம்பினேரை நடுவழியில் கைவிட்டுவிடும் வழக்கம் பொதுவுடைமையருக்கே தனியுடைமை

நம்பிக்கையில்லா தீர்மானம்வந்தபோது சட்டசபையில்நடந்ததென்ன?

கம்யூனிஸ்டுகள் குற்றச்சாட்டுகளுக்கு அண்ணுபதில்

சென்னை, டிச. 11—

நேற்று மாலை சென்னை-இராயப்பேட்டையில், முத்தமிழ் முன்னேற்ற மன்றச் சார்பில் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில், சட்டசபையில் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது தி. மு. கழகத்தினர் நடந்துகொண்டவிதம் குறித்துத் தவருன பிரசாரம் செய்துவரும் கம்யூனிஸ்டுகளுக்குத் தக்க பதில் தந்து, நிலைமையை விளக்கினர்.

அதன் விவரம் இங்கு தரப்படுகிறது:—

"என்க்கு இரண்டு மணி நேரமாகக் கடுமையான தலைவலி; அரசியல் தலைவலியல்ல—உடல்நிலை காரணமான தலைவலிதான்; ஓரளவு அரசியல் காரணமும் இருக்கலாம். காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை கனம் அமைச்சர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அமர்ந்து, தென்னகத்தை மிரட்டும் இந்தி பற்றி நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் காரணமாகவும் ஓரளவு தலைவலி ஏற்பட்டிருக்கலாம். ஆனல், ஆலோசனைக் கூட்டத்தின் முடிவு தலைவலியைத் தந்துவிட்டதாகத் தவருகக் கருதிவிடாதீர்கள்; அந்த முடிவு பற்றி நான் இப்போது எதுவும் கூறப்போவதாகவும் எதிர்பார்க்காதீர்கள்.

"எடுக்கப்பட்ட முடிவு, மத்திய சர்க்காருக்கும், பாராளுமன்றக் கமிட்டிக்கும் சென்னை சர்க்கார் தெரிவித்தான பிறகு ஏற்படுகிற முடிவைப் பொறுத்துத்தான் தமிழ்நாட்டு அரசியலின் முடிவு அமைய இருக்கிறது. சென்னை சர்க்கார், ஓரளவு எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் அறிந்துகொள்ள பெருமுயற்சி எடுத்துக்கொண்டது பாராட்டத்தக்கது ஆகும். அவ்வளவுதான் இதுபற்றி நான் இப்பொழுது சொல்ல முடியும்.

"தலைவலி; அதனல், நீண்ட நேரம் பேச முடியாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன் நான் பேசவேண்டியவைகளின் குறிப்பையும் எனக்கு முன் பேசியவர்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கிருர்கள்.

"முதுகுளத்தூர் சம்பவம் பற்றி சட்டசபையில் நாம் கடைப்பிடித்த கொள்கைகளையும், அது பற்றி கம்யூனிஸ்டுக்காரர்கள் பேசி வருவதையும் குறிப்பிட்டு நண்பர் ஆசைத்தம்பி உங்களுக்குச் சொன்ஞர். தோழர் இராமமூர்த்தி ஒரு நிலையில் நிற்கக்கூடியவரல்ல; அதனல் அவருடைய கருத்தும் நிலைத்ததாக இருக்காததுகுறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

"சட்டசபையில் நடைபெறும் எந்த நடவடிக்கையும், சட்டசபை அலுவல் கமிட்டி முன்னுல் வைக்கப்பட்டு, எந்தெந்தப் பிரச்சினையை எந்தெந்த அளவு பேசலாம்—யார் யார், எதை எதை, எத்தனை நாளைக்கு விவாதிக்கலாம் என்பதைப் பற்றி கமிட்டியிலுள்ள எல்லோரும் கலந்தாலோசித்து ஒருமித்த கருத்தை முடிவு செய்த பிறகுதான் காரியமாற்றப்படுகிறது. அந்தக் கமிட்டியிலே, சர்க்கார் கட்சித் தலைவரான கனம் சுப்பிரமணியமும், எதிர்க்கட்சித் தலைவரான திரு. வி. கே. இராமசாமி முதலியாரும், தி. மு. கழகச் சார்பில் நானும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான திரு. கல்யாணசுந்தரமும், பி. சோ. கட்சித் தலைவரான திரு. சின்னதுரையும், சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரான திரு. பக்கிரிசாமி பிள்ளையும், மற்றும், சுயேச்சையாளரான டாக்டர் மதுரமும், ஆதித்தன் முதலியோரும் இருக்கிருர்கள். இதை எதற்குச் சொல்லுகிறேன் என்ருல், சட்டசபையில் எந்தப் பிரச்சினையும் திடீரென்று பேசப்படுகிறது என்று நீங்கள் நினைக்கக்கூடாது என்பதற்குத்தான்; எதுவும், முன்கூட்டியே முறை வகுக்கப்பட்டுதான் சபைக்குக் கொண்டுவரப்படுகிறது என்பதை நீங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

"முதுகுளத்தூர் பிரச்சினை பற்றி அந்தக் கமிட்டியில் பேச ஆரம்பித்த நேரத்தில், திரு. கல்யாணசுந்தரம், தனது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இதை—இங்கு கம்யூனிஸ்டு நண்பர்கள்—கம்யூனிஸ்டுகள் பேசுவதைக் கேட்பவர்கள் யாரேனும் இருந்திருந்தால் அவர்கள்—தங்கள் மனதில் பதிவு செய்துகொள்ளவேண்டும். இதுகூட ஆச்சரியமில்லை; இன்னும் சொல்லப்போனல், தோழர் கல்யாணசுந்தரம் அன்றையக் கமிட்டிக் கூட்டத்துக்கு வரவே இல்லை. தனக்கிருக்கும் பொறுப்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்

காலவரம்பு எதுவும் கூடாது

இந்தி பேசாத மக்களுக்குப் பாதுகாப்பு தேவை

இந்தியாவின் ஆட்சி மொழிபற்றி சென்னை சர்க்கார் கருத்து

சென்னை, நவ. 10—

ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக, இந்தியுடன் சேர்ந்து தொடர்ந்து காலவரம்பின்றி நீடிக்க வேண்டும்; அகில இந்திய சர்க்கார் உத்தியோகங்களைப் பொறுத்தவரையில் இந்தி வழங்காத பகுதி மக்களுக்குத் தக்க பாதுகாப்பு வேண்டும் என்பதே இந்தியாவின் ஆட்சி மொழியைப் பொறுத்து, சென்னை சர்க்காரின் கொள்கையாக இருக்கும் என்று தெரியவருகிறது.

இந்தக் கொள்கையையே வற்புறுத்தி, ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கையைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று தரும் என்றும் தெரியவருகிறது.

சர்க்கார் தயாரித்த நகல் அறிக்கையை, இன்று, சட்டசபையில் உள்ள எல்லாக் கட்சியினரும் கூடிப் பரிசீலித்தனர் என்றும், சிறு சிறு மாற்றங்களுடன் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது என்றும் மந்திரி சுப்பிரமணியம் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிருர்; சீக்கிரமே இந்த அறிக்கை வெளியிடப்படும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

கடந்த நவம்பர் 24-ந் தேதி தீர்மானிக்கப்பட்டபடி, இன்று எல்லாக் கட்சியினரும் மீண்டும் கூடி ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றி விவாதித்தனர்.

சர்க்கார் தயாரித்திருந்த நகல் அறிக்கைமீது அனைவரும் கருத்து தெரிவித்த பின் அறிக்கை சிறு திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இன்றைய மாநாட்டில், சர்க்கார் சார்பில் முதன் மந்திரி காமராசர், மந்திரிகள் சுப்பிரமணியம், பக்தவத்சலம் ஆகியோரும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, கா. கா. க. தலைவர் வி. கே. இராமசாமி முதலியார், தி. மு. கழகத் தலைவர் அண்ணு, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பி. இராமமூர்த்தி, டாக்டர் ஏ. மதுரம், சோஷலிஸ்டுத் தலைவர் பக்கிரிசாமி பிள்ளை, கே. பாலசுப்பிரமணிய அய்யர், ரஜாகான், ஏ. வேதரத்தினம் பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

தடுப்புக்காவல் சட்டம்: மேலும் மூன்ருண்டுகளுக்கு நீடிப்பு

பலத்த கண்டனம் பொருட்படுத்தப்படவில்லை

'அரசியல் சட்ட எரிப்பைத் தடுக்கச்சட்டம் ஏன்' என்கிருர் டாங்கே

புதுடில்லி, டிச. 10—

தடுப்புக்காவல் சட்டத்தின் ஆயுட்காலம் மேலும் மூன்ருண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுவிட்டது.

இதற்காக மக்கள்சபையில் கொண்டுவரப்பட்ட மசோதா கடுமையான விவாதத்திற்கும் எதிர்ப்பிற்கும்பிறகு நிறைவேற்றப்பட்டது.

மக்கள்சபையில், இந்த மசோதாவை கம்யூனிஸ்டு, பி. சோ., சோஷலிஸ்டு, மற்றும் பல கட்சியினரும், சுயேச்சைகளும் வன்மையாகக் கண்டித்துப் பேசியிருக்கின்றனர்.

விவாதத்திற்கு உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் பதில் தந்திருக்கிருர்.

தடுப்புக்காவல் சட்டத்தை நீடிப்பதற்காக, திராவிடர் கழகத்தின் அரசியல் சட்ட எரிப்புக் கிளர்ச்சியையும், இராமநாதபுரம் சம்பவங்களையும் காரணமாகக் காட்டினர், பந்த்.

கம்யூனிஸ்டு தலைவர் டாங்கே பேசுகையில், காந்தியாருடைய படங்களையும், அரசியல் சட்டத்தையும் எரிப்பதைத் தடுப்பதற்காக சென்னை சர்க்கார் கொண்டுவந்திருக்கும் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தார்.

"காந்தியார் படங்களை யாராவது எரிக்கிறேன் என்ருல் எரித்துவிட்டுப் போகட்டுமே! காந்தி பக்தர்கள், காந்தியார் படத்தைச் சட்டம் போட்டு மாட்டிக்கொள்ளட்டும்; பிடிக்காதவர்கள் எரிக்கட்டுமே! பக்தர்கள் காப்பாற்றவேண்டிய படத்தை, போலீசாரும் சட்டமுமா காப்பாற்றவேண்டும்?

"மூன்றுநாளுக்கு ஒருமுறை மாற்றப்படுகிறது — திருத்தப்படுகிறது—அரசியல் சட்டம்! அதனை எரிக்கிறேன் என்கிருர்கள், பிடிக்காதவர்கள்! அதற்காக அதனைத் தடுப்பதற்குச் சட்டம் ஏன்?

"நாம் சட்டத்தை வைத்துக்கொள்வோம்; ஆனல் சிலர் அதனை எதிர்ப்பதாக வைத்துக்கொள்வோம்; அதற்காக எரிக்கிறேன் என்ருல், அதைத் தடுப்பதற்கு வேறெந்த நாட்டிலாவது சட்டம் இருக்கிறதா?

"இதை எல்லாம்—காந்தியார் படத்தை எரிப்பதையும், அரசியல் சட்டப் புத்தகத்தைக் கொளுத்துவதையும் தவறென்றே வைத்துக்கொண்டாலும், அவற்றை சட்டத்தால் தடுக்க நினைக்கக்கூடாது; மக்களிடம் சென்று நிலையை விளக்கி, அவர்கள் இவற்றைத் தவறு என உணருமாறு செய்ய வேண்டும்."

டாங்கே இவ்வாறு பேசியதற்கு உள்நாட்டு மந்திரி விவாத முடிவில் பதிலளிக்கையில், 'டாங்கேயின் இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று கூறியிருக்கிருர்.

குறுக்கிட்டுப் பேசுகையில் டாங்கே மீண்டும் குறிப்பிட்டதாவது:—

"காந்தியார் படத்தை எரிப்பதையும், அரசியல் சட்டப் புத்தகத்தை எரிப்பதையும் நான், தவறு என்கிறேன்; ஆனல், அவற்றைத் தடுக்க இதுபோல ஒரு போலீஸ் சட்டம் கூடாது; போலீஸ் சட்டத்தால் அவற்றைத் தடுக்க நினைக்கக் கூடாது; அரசியல் ரீதியாக மக்களை அணுகி, அவர்களுக்கு விளக்கம் தந்து, நமது கருத்துக்கு அவர்களைத் திருப்ப வேண்டும். இப்படித்தான், அந்தச் செயல்களைத் தடுக்க முடியும்"

பல திருத்தங்களும் மசோதாவிற்குக் கொண்டுவரப்பட்டன; ஆனல் அவை அத்தனையும் நிராகரிக்கப்பட்டு, மசோதா, ஆதரவாக 156 வாக்குகளும், எதிராக 48 வாக்குகளும் பெற்று நிறைவேறியிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—12—57 புதன்

நாடு மதிக்க செயல்படுவீர்

மக்களின் நலனுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கொண்டு நடைபெறும் ஜனநாயக ஆட்சியில், தமிழ்நாட்டு அரசாங்கம், பலமுறை மக்களுக்கு ஏற்படும் அநீதியைப் போக்கவும், கேட்டினைக் களையவும், ஆபத்தினைத் தவிர்க்கவும் தவறியுள்ளது என்பதற்கு நாம் பல சான்றுகள் எடுத்துக்காட்டி, உண்மையை நாட்டு மக்கள் அறியச் செய்துள்ளோம்.

இதற்கு முன், 'கேசரிப்' பருப்புக் கலப்பின் காரணமாகத் தென்னவர் அதிகம் பாதிக்கப்படுவதை எடுத்துரைத்துள்ளோம்.

'கேசரி'ப் பருப்பின் கலப்பு, 'பக்கவாத நோய்'க்குக் காரணமாக உள்ளது என்பது, உணவு அமைச்சர் உள்பட, பல திறமை வாய்ந்த மருத்துவத்துறை நிபுணர்களின் முடிவான கருத்தாகும்.

சென்னை மாநில அரசு 'கேசரி'ப் பருப்பு இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளது; இருந்தும், இந்த மாநிலத்தில் அடிக்கடி 'கேசரி'ப் பருப்பு கலப்படத்தைப் பற்றிப் பேசப்படுகிறது.

வெறும் தடையின் மூலம் தென்னவருக்கு ஏற்பட்டுவரும் தீங்கினைப் போக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதற்கான காரணங்களை சென்னை அரசாங்கம் ஆராய வேண்டும்.

சென்னை மாநிலத்தில் 'கேசரி'ப் பருப்பு பயிரிடப்படுவதில்லை; மேலும், இறக்குமதிக்கும் தடை உள்ளது; இருந்தும், இந்த மாநில மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

'கேசரி'ப் பருப்பு வடநாட்டிலுள்ள மாநிலங்களில்தான் பயிராகின்றன; குறிப்பாக, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலிய மாநிலங்களிலிருந்து இலாபநோக்கு கொண்ட வியாபாரிகள், தென்னவரின் நலனைப் பாதிக்கும் முறையில், மற்றப் பருப்பு வகைகளுடன் 'கேசரி'ப் பருப்பையும் கலந்து நம் மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

இந்த நிலை, மக்களின் உடல் நலனைப் பாதிப்பது ஒருபுறம் இருக்க, கலப்புத் தானியங்களை மலிவான விலையில் வடநாட்டு வியாபாரிகள் ஏற்றுமதி செய்வதன் விளைவாக, நல்ல 'தர'மான தானிய வாணிபத்தில் ஈடுபட்டுள்ள தமிழக வியாபாரிகள், போட்டிபோட முடியாமல் தவிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த உண்மைகளை சென்னை அரசாங்கம் ஆழ்ந்து ஆராயவும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், அவசியமானல் மத்திய அரசாங்கத்திடம் வடநாட்டு வியாபாரிகளின் சமூகத் துரோகச் செய்கைகளை எடுத்துரைக்கவும், தென்னவரின் நலனைப் பாதுகாக்கவும் முன்வர வேண்டும். இதை மறந்து, 'கேசரி'ப் பருப்புக் கலப்புக்கு வியாபாரிகளின் இலாப நோக்குதான் காரணம் என்று பொதுப்படையாகக் கூறுவது, சென்னை அரசாங்கம் வடநாட்டு வியாபாரிகளுக்கு வாரிசாக — தத்துப் பிள்ளைகளாகத் தங்களைக் கற்பித்துக்கொண்டனரோ என்றே நினைக்கும்படிச் செய்கிறது.

தென்னகத்து வியாபாரிகளின் நேர்மையான வாணிபத்தை, சமூகத் துரோகச் செயல் மூலம் தட்டிப்பறிக்க முனைவதை இந்த மாநில அரசாங்கம் தடுக்கவேண்டியது கடமையாகும். வடவர் மீது குற்றம் சாட்டவே இதைக் கூறுவதாகக் கருதுபவர்கள், அண்மையில், "இந்தியத் தேயிலை வெளிநாடுகளில் விரும்பப்படாததற்குக் காரணம், வடநாட்டு வியாபாரிகள் தேயிலையின் தரத்தை, இலாப நோக்குடன் மாற்றுவதுதான்" என்று வெளியிடப்பட்ட கருத்தினையும் நினைவுகொள்ள வேண்டுகிறோம்.

எனவே, வடநாட்டு வியாபாரிகள் இலாபத்திற்காகக் 'கேசரி'ப் பருப்பைக் கலந்திருக்கக்கூடும் என்பதில் சிறிதளவும் ஐயுற இடமில்லை.

இந்தப் பிரச்சினை தென்னாட்டு மக்களையும், தென்னாட்டு வாணிபத்தையும் பாதிக்கும் அளவுக்கு நாள்பட வளர்ந்து வருகிறது.

சென்னை அரசாங்கம், 'கேசரி'ப் பருப்பை மட்டும இந்த மாநிலத்திற்கு இறக்குமதி செய்யத் தடை விதித்திருப்பது ஒன்றே தக்க பரிகாரமாக அமையவில்லை என்பதை உணர்ந்து, வடநாட்டிலிருந்து 'கேசரி'ப் பருப்பு தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களுக்கு வருவதையும் கண்காணித்து அந்தந்த மாநில அரசாங்கங்களுக்கும் நிலைமையை உணர்த்தி, பொதுவாக, தென்னாட்டுக்குக் 'கேசரி'ப் பருப்பு இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்க வேண்டும்.

மற்றும், வடநாட்டிலிருந்து 'கேசரி'ப் பருப்பு மற்ற தானியங்களுடன் கலந்து இங்கு அனுப்பப்படுவதையும் தடுக்க வேண்டும். அப்போதுதான், மக்களுக்கு நன்மை செய்தவர்களாகவும், தென்னாட்டு வாணிபத்தைப் பாதுகாத்தவர்களாகவும் இந்த மாநில அமைச்சர்களை நாடு மதிக்கும்!

'இன்றையக் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது'

பொது ஊழியக் குழு அறிக்கை

புதுடில்லி, டிச. 10—

'மாணவர்களுடைய மனோபாவம், அவர்களின் சிந்தனை சக்தி முதலியன வளர்ச்சி பெற இப்போதைய கல்வி முறை போதுமானதாக இல்லை"

என்று, பொது ஊழியக் குழுவின் 1956—57-ம் ஆண்டின் நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

"மாணவர்கள் பொதுவாக பலவற்றைக் கற்றவர்களாக இல்லை; மனப்பாடம் செய்து ஒப்புவிக்கிறார்கள் என்பதே பேட்டியின்போது புலப்படுகிறது. மேலும், வேலைக்கு ஏற்ற நபர்களாக இல்லாத காரணத்தினால், பலர் பேட்டியின்போது நிராகரிக்கப்படுகின்றனர்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்கு உதவ....

மத்திய சர்க்காரின் திட்டம்

புதுடில்லி, டிச. 9—

பல மாநிலங்களிலுமாக கைத்தறித் தொழிலுக்கு உதவுவதற்கான திட்டங்களுக்கென மத்திய சர்க்கார், ரூ. 82,50,000 வரை ஒதுக்கியிருக்கிறார்களாம்!

நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேருவதற்கான பங்கு முதலீடு கொடுத்து உதவுவது உட்பட, பல திட்டங்களுக்காக இந்தத் தொகை செலவிடப்படுமாம்!

இந்தியாமுழுவதிலுமாக சுமார் 26,000 நெசவாளர்களுக்கு, கூட்டுறவு சங்கங்களில் சேருவதற்கு பங்கு முதலீடு உதவப்படும் என்றும், இவர்களில் 207 பேர்களே சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பல ஆயிரம் ரூபாய் செலவில் தேநீர் விருந்து

ஏற்பாடு செய்தவர்களை ஏமாற்றினர் முதன் மந்திரி

விசயநகரம், டிச. 7—

இங்கிருந்து விசாகப்பட்டணம் புறப்படுமுன் இங்கு வந்த ஆந்திர முதன்மந்திரி, தனக்கு 'பெரிரோ அய்லாய்ஸ் கார்பொரேஷன்' என்ற நிறுவனம் தரவிருந்த தேநீர் விருந்தொன்றில் கலந்து கொள்வதாக இருந்தது.

நிறுவனத்தினர் பல ஆயிரம் ரூபாய் செலவில் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். கல்கத்தாவிலிருந்து விசேடத் தயாரிப்புகள் கூட விருந்துக்காக வரவழைக்கப் பட்டிருந்ததாம்; என்றாலும், சஞ்சீவரெட்டி, விருந்துக்கு வந்து எதுவுமே சாப்பிடாமல், விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலினுள் நுழைந்து, ஒரேஒரு கோப்பை காப்பி மட்டும் அருந்திவிட்டு வெளியேறிவிட்டாராம்! விருந்து ஏற்பாடு செய்திருந்தவர்கள் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகிவிட்டனராம்!

வாரத்திற்கு ஒரு நாள் உண்ணாநோன்பு!

வருடத்தில் 30-இலட்சம் டன் தானியம் மிச்சப்படுத்துமாம்

ஆஜ்மீர், டிச. 9—

இந்தியாவில் உள்ள எல்லா ஆண்களும் வாரத்திற்கு ஒரு நாள் உபவாசம் இருந்தால், இப்போது பற்றாக்குறையாயிருக்கும் 30 இலட்சம் டன் உணவு தானியத்தையும் சரிக்கட்டிவிடலாமாம்!

இவ்வாறு, உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதில் பெண்களின் பங்கு என்ன என்பதுபற்றி இங்கு நடைபெற்ற ஒரு விவாத அரங்கில் பேசுகையில், டெல்லி செஞ்சிலுவைச் சங்கத் தலைவியான திருமதி டாக்டர் எம். பி. காகல் என்ற அம்மையார் யோசனை கூறினார்களாம்!

மேற்கு நியூகினியைத் தரமாட்டார்களாம்!

டச்சுத் தூதுவர் வம்பு

வாஷிங்டன், டிச. 9—

'மேற்கு இரியன்' என்ற நியூகினியை, இந்தோனேஷிய சர்க்காரிடம் தாங்கள் ஒப்படைக்கப் போவதில்லை என்றும், அப்படி ஒப்படைத்தாலும் பழுதுபட்டுள்ள உறவுகள் சீர்படப்போவதில்லை என்றும் அமெரிக்காவில் டச்சு சர்க்காரின் தூதுவராயிருக்கும் டாக்டர் ஜே. வி. வான்ரோஜென் என்பார் கூறியிருக்கிறார்.

'தடுக்கப்பட முடியுமானால், நாங்கள், இந்தோனேஷியாமீது இராணுவ நடவடிக்கை எதுவும் எடுக்கமாட்டோம்' என்றும் அவர் கூறினாராம்!

நிர்வாகத்தில் ஊழியர்களுக்குப் பங்கு

நான்கு நிறுவனங்களில் அமுல்

புதுடில்லி, டிச. 10—

நான்கு நிறுவனங்களில் நிர்வாகத்தில் ஊழியர்கள் பங்கு பெறும் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறதென்று மக்கள சபையில், துணைத் தொழிலாளர் அமைச்சர் தெரிவித்தார். சென்னை சிமென்ட் கம்பெனி, சென்னை அரசாங்கப் போக்குவரத்து இலாகா, டாடா இரும்பு உருக்கு நிறுவனம், மோடி நூற்பு நெசவு ஆலை ஆகிய நான்கு இடங்களில் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

பக்கிங்காம் கால்வாய்

சென்னை-ஆந்திரமாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் தாக்கீது

புதுடில்லி, டிச. 10—

"பக்கிங்காம கால்வாய் மூலம் போக்குவரத்து நடத்துவதற்கு தூர்ப்புறவு நடத்த வேண்டும் என்று சென்னை அரசாங்கத்திற்கும், ஆந்திர அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கம் தாக்கீது அனுப்ப முடிவு செய்துள்ளது" என்று, மக்கள்சபையில் போக்குவரத்து அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இந்தக் கால்வாய் ஆந்திரத்தில் 160 மைல் நீளத்திற்கும், சென்னையில் 60 மைல் நீளத்திற்கும் ஓடுகிறது.

ரஷ்யாவிற்குக் குரங்குகள் ஏற்றுமதி

புதுடில்லி, டிச. 8—

கடந்த இரண்டுவாரங்களில் மட்டும் புதுடில்லியிலிருந்து சுமார் 3,400 குரங்குகள் மாஸ்கோவிற்கு விமானமூலம் அனுப்பப்பட்டனவாம்!

'இந்தக் குரங்குகளை வான மண்டலப் பிரயாணத்திற்கு ரஷ்யா அனுப்புமா?' என்று பலர் கேட்கின்றனராம்!

கன்னிக் கோட்டைக்கு 10 மைலுக்கு அப்பாலுள்ள கப்பாட் என்ற இடத்திற்கு அருகில் கடலிலிருந்து ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள கள்ளத் தங்கத்தை இன்று சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இதற்குமுன்பு 5 முறை இதே இடத்தில் ரூ. 6 இலட்சம் பெறுமானமுள்ள கள்ளத் தங்கம கைப்பற்றப்பட்டுள்ளதாம்.

வீடு கட்டும் திட்டங்கள் ஒன்றாக இணைப்பு

சென்னை, டிச. 10—

சென்னை மாநிலத்தில் பல்வேறு வீடு கட்டும திட்டங்களை ஒன்றாக இணைத்து அமுல் நடத்துவதற்காக வீடு கட்டும நிறுவனம ஒன்று ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முனைந்துள்ளது. இதற்கு காப்டன் டி. ஞான ஒளிவு தலைவராக இருப்பார் என்று தெரியவருகிறது.

கருணை மனுக்கள் மீது சர்க்கார முடிவு

புதுடில்லி, டிச. 10—

1956 சனவரியிலிருந்து 1957 நவம்பர் 1-ந் தேதி வரையில் மொத்தம் 364 கருணை மனுக்கள் ஆராயப்பட்டன என்றும், 68 கைதிகள் சம்பந்தமாக மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது என்றும் 69 கைதிகளின் தண்டனைகள் குறைக்கப்பட்டது என்றும் மக்கள் சபையில், அமைச்சர் பந்த் கூறினார்.

தற்போது, மரண தண்டனையைக் குறைப்பது சம்பந்தமான 24 கருணை மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

சேரிகள் சீர்திருத்தம்

சென்னைக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டதாம்

சென்னை, டிச. 9—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சேரிகள் சீர்திருத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டுள்ளதாம்; ரூ. 168 இலட்சம் மட்டுமே சென்னைக்குக் கிடைக்குமாம்!

இந்தத் திடீர்க்குறைப்பின் காரணமாக, சென்னை அரசாங்கத்தின் விருப்பப்படி சேரி சீர்திருத்தம் செய்வதற்கு இல்லை; உள்ள தொகையைக் கொண்டு இயன்ற அளவே திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு சென்னை அரசாங்கம் வந்துள்ளது.

சென்னை மாநிலத்தில், சென்னை நகரத்தில் மட்டுமே சேரி சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

கூவம் நதிக்குத் தெற்கில் உள்ள சேரிகளை நகர அபிவிருத்தி நிறுவனமும், அதற்கு வடக்கில் உள்ள சேரிகளை நகர சபையும் மேற்கொண்டு, இந்தத் தொகையை மட்டுமே செலவிட்டுத் திட்டத்தை நிறைவேற்றும் என்று தெரியவருகிறது.

'வடநாட்டுப் பருப்புக்குத் தடை விதிக்க வேண்டும்'

'கேசரிப் பருப்பு' கலப்படம் அதில்தான் இருக்கிறது

தென்னாட்டு, மக்களுக்கு நாள்தோறும் தேவைப்படும் முக்கிய உணவு தானியத்தில் 'துவரம் பருப்பு'ம் ஒன்றாகும்; இத்துடன், 'கேசரிப்பருப்பு' கலக்கப்படுவதன் காரணமாகப் பக்கவாத நோய் ஏற்பட்டு, தென்னவரின் உடல் நிலை குன்றுவதற்கு ஏதுவாகிறது என்று, சென்னை உணவு அமைச்சர் பக்தவத்சலம் உள்பட பலர் அடிக்கடி எடுத்துக் கூறிவந்துள்ளனர்.

இந்தப் பருப்புக் கலப்படக் குற்றச்சாட்டு, பொதுவாக, நாட்டின் வியாபாரிகள்மீது கூறப்படுவதையும் மக்கள் அறிவார்கள்; ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்கு, முக்கியமாக யார் பொறுப்பாளிகள் என்று ஆராய்ந்து, விஷயமறிந்த விருதை வியாபார சங்கச் செயலாளர் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்; அதில் அவர் கூறியிருப்பதாவது :—

"வடநாட்டு வணிகர்களே இந்தத் துவரம்பருப்போடு 'கேசரிப் பருப்பை'க் கலப்படம் செய்கிறார்கள்; இதன் காரணமாக, தமிழ்நாட்டில் தயாராகும் துவரம் பருப்பைவிட, வடநாட்டு பருப்பு மலிவான விலையில் கிடைக்கிறது.

"உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வடநாட்டுப் பருப்பு தமிழ்நாட்டுக்கு ஏராளமாக இறக்குமதி செய்யப்படுகிறது.

"வடநாட்டிலிருந்து கேசரிப் பருப்பை' இறக்குமதி செய்யக் கூடாது என்று சென்னை அரசாங்கம் தடைவிதித்துள்ளது. எனவே தமிழ்நாட்டு வியாபாரிகள்மீது குற்றம்சாட்டுவது அர்த்தமற்றது.

"இந்த நிலையில், துவரம்பருப்பு வடநாட்டு மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதை உடனே சென்னை அரசாங்கம் தடை செய்ய வேண்டும்; இதைச் செய்தால்தான் கேசரிப் பருப்பு கலந்த துவரம் பருப்பு விற்பனை செய்யப்படுவதைத் தடுக்க முடியும்.

"மேலும், தமிழகத்தில் மட்டுமே 'கேசரிப் பருப்பு' இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது; இதை மற்ற தென் மாநிலங்களிலும் அமுல் செய்ய முயற்சிக்க வேண்டும். கள்ளக் கடத்தலுக்கு இடமளிக்காத முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

தமிழ் நாட்டில் கல்விச் சீர்திருத்தம்

அடுத்த ஆண்டுமுதல் 11-ஆண்டு பள்ளிப் படிப்பு அமுலாகும்

தனிப்பட்டோர் பள்ளி நிர்வாகத்தைக் கண்காணிக்க சர்க்காருக்கு அதிகாரம்

சட்டமன்றக் குழு சிபாரிசுகள்: சர்க்கார் முடிவு

கல்வி சம்பந்தமான 'வெள்ளை அறிக்கை'யைப்பற்றி ஆலோசித்த சென்னை மாநில சட்டமன்றக் குழுவின் சில யோசனைகளை ஏற்றுக்கொண்டு சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

புதிய கல்வி ஆண்டு துவக்கத்தில்— அதாவது, அடுத்த ஜூன் மாதத்தில், பள்ளிப் படிப்பை—7 ஆண்டுகள் ஆரம்பக் கல்வி; 4 ஆண்டுகள் உயர்நிலை (செகண்டரி)க் கல்வி—அமுலாக்குவது சம்பந்தமான குழுவின் சிபாரிசை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

1965—66-க்குள் மாநிலத்தின் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் 5-வது வரை கட்டாய ஆரம்பக்கல்வி அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

அரசினர் ஏற்றுக்கொண்டுள்ள சிபாரிசுகள் வருமாறு:—

பள்ளிக் கல்வியின் காலம் மொத்தம் 11 ஆண்டுகளாக இருக்க வேண்டும்; நிரந்தர அடிப்படையில் அதை 12 ஆண்டுகளாக அதிகரிக்கக்கூடாது; ஆனால் இச் சீர்திருத்தம் அமுலாகும் காலத்தில் ஒரு சில பள்ளிகளில் மட்டும் தற்காலிகமாக 12 ஆண்டுக் கல்வி முறை இருந்துவர வேண்டியது அவசியமாகும்.

உயர்நிலைப் பள்ளிக் குழுவின் சிபாரிசுப்படி, எஸ். எஸ். எல். சி. படிப்புக் காலம் மூன்றாண்டுகளாக இருந்துவருவதற்குப் பதிலாக 4 ஆண்டு செகண்டரி படிப்பாக மாற வேண்டும்; அதாவது பள்ளி நேரம் மணியாக இருக்க வேண்டும்.

ஜூனியர் செகண்டரி படிப்புக்கும், உயர்தர ஆரம்பப் பள்ளிப் படிப்புக்குமிடையே உள்ள பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும்; ஒரே மாதிரி படிப்பு முறை மட்டுமே இருக்க வேண்டும். 'தரம்' குறையாத அளவில், 8 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகளாக அதைச் சுருக்க வேண்டும்.

ஆதாரக் கல்விக்கும்—சாதாரண கல்விக்குமிடையே உள்ள வேற்றுமையை நீக்கி, அடுத்த 10 ஆண்டு காலத்திற்குள் இவற்றை இணைக்கவேண்டும்.

கற்கும் மொழிப் படிப்புகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, அதை மூன்று பாகங்களாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்; முதல் பாகத்தில் பிரதேச மொழியையும், இரண்டாவது பாகத்தில் இந்தி அல்லது முதல் பாகத்தில் சேராத வேறு இந்திய மொழியையும், மூன்றாவது பாகத்தில் ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறு மொழியையும் கற்பிக்கலாம்.

புதிய 4 ஆண்டு உயர்நிலைப் படிப்பு (செகண்டரி)ப் பிரிவில் சேரும் ஒவ்வொரு மாணவரும் 3 மொழிகளைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும்; அவற்றில் அரசாங்கப் பரீட்சை உண்டு. புதிய 8-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்புவரையில் புதிய பாடத்தின் அம்சமாக 4 ஆண்டுகளுக்கு இந்தி போதித்தால் போதுமானதாகும். 6, 7-வது வகுப்புகளில் இந்தியை நீக்கிவிடலாம்.

புதிய பாடத் திட்டம் 1957—58-ம் ஆண்டு முடிவுக்குள் தயாராகிவிடவேண்டும். ஆரம்பக் கல்வியில் தற்போதைய கல்வி முறையிலிருந்து புதுக் கல்வி முறைக்கு மாறுவதை 1958—59-ல் ஆரம்பித்து, 1962—63-ம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்துவிட வேண்டும்; மாறுதலை எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் இரு நிலைகளில் துவங்கி, பின்னர் ஆண்டிற்கு ஒரு வகுப்புவீதம் அதைப் பரவலாக்கிக்கொண்டு போக வேண்டும். இதை, ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமின்றி செகண்டரிப் பள்ளிகளிலும் அமுலுக்குக்கொண்டுவர வேண்டும். மாநிலத்திலுள்ள 25 சதவிகித செகண்டரிப் பள்ளிகளில் புதிய பாடத் திட்டம் 1959—60-லிருந்து அமுலாக்கப்பட வேண்டும், அந்த ஆண்டில் 4-வது படிவம் ஒழிக்கப்பட்டு, அந்தப் பள்ளிகளில் அதற்குப் பதிலாகப் புதிய 8-வது வகுப்பை ஆரம்பிக்க வேண்டும். 1962—63-ல் புதிய 11-ம் வகுப்பு ஏற்பட வேண்டும்.

இதேபோன்று, 1960—61-ல் மொத்தமுள்ளதில் 10 சதவிகித உயர்நிலைப் பள்ளிகளில் புதிய திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

பல்கலைக்கழகத்துக்கு முற்பட்ட வகுப்பு, கல்லூரிகளில், 1966—67 வரை இருக்க வேண்டும்; அதற்குப் பிறகு அதை ஒழித்து விட வேண்டும்.

குழந்தைகளைப் பள்ளிகளில் முதல் வகுப்பில் சேர்ப்பதற்கான குறைந்தபட்ச வயது தற்போது உள்ளபடி 5 ஆக இருந்துவர வேண்டும்; கட்டாயக் கல்வி முறையை அமுல் நடத்துவதற்கு குறைந்தபட்ச வயது 6 ஆக இருக்க வேண்டும்.

1965—66-ம் ஆண்டிற்குள் ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும ஐந்தாண்டுக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.

தகுந்த அதிகாரிகள் மூலமாக ஏழைகள் என நிச்சயிக்கப்பட்ட மாணவர்களுக்குப் பள்ளியில் இலவச உணவு அளிப்பதற்கு ஆரம்பக் கல்விக் கட்டத்தில் ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்யவேண்டும்.

சேர்க்கப்படும் மாணவர்கள், ஒரு ஆசிரியருக்கு 40 பேருக்கு மேல் உயர்ந்தாலொழிய புதிய ஆசிரியர்கள் நியமனத்துக்கு அனுமதிக்கக்கூடாது. கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் என்பதில் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறை இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கு தற்போது பல விதமான சம்பளமுறை இருப்பதைக் கவனித்து, கூடுமானவரையில் ஒரே சீரான நிலைமை இருக்கும்படியாகத் திருத்தப்படவேண்டும். ஒரேவிதமான தகுதி யோக்கியதாம்சம்படைத்து, ஒரேவிதமான வேலை செய்கிறவர்களுக்கு, அவர்கள் பல்வேறு நிர்வாகத்தின் கீழ் வேலை செய்கிறார்கள் என்பதற்காக சம்பளவிகிதத்தில் வித்தியாசம் காட்டக்கூடாது.

திட்டத்தை அமுல் நடத்தும் வேலையைக்கவனிக்கும் பொறுப்பு, கல்வித்துறையிடமே தொடர்ந்து இருந்துவரவேண்டும்.

பள்ளி நிர்வாக அமைப்புகளின் பிரச்சினையைக் கூர்ந்து கவனிப்பது அவசியமாகிறது.

தனியார் நடத்தும் கல்வி நிறுவனங்களைக் கவனிக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இருக்கவேண்டும்.

துங்கபத்திரா அணைக்கட்டில் வள்ளுவர் மன்றம் அமைப்பு

துங்கபத்திரா அணைக்கட்டு வட்டத்தில் மறுமலர்ச்சி எண்ணங்கொண்ட தோழர்களால் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் வள்ளுவர் மன்றம் துவக்கப்பட்டது.

சென்னை—லாக் நகர் சாமிபடிப்பகப்பொதுக் கூட்டம்

மு. கருணாநிதி, கா. அப்பாதுரை கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 10—

சென்னை—சேப்பாக்கம், லாக் நகரிலுள்ள சாமி படிப்பகத்தின் சார்பில், கே. வி. கே. சாமி நினைவு நாளும், இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டமும் 5—12—57 மாலை 6-30 மணிக்கு, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடத்தப்பட்டது.

தலைவர் முன்னுரையில், கே. வி. கே. சாமியின் அரிய தொண்டினைக் குறித்தும், இந்தித் திணிப்பினால் ஏற்படவிருக்கும் பேராபத்தை விளக்கியும் பேசினார்.

அடுத்து, தோழர்கள் எம். கே. மணி, மா.பா.சாரதி, ஆ. வெ. ஜெயராமன் ஆகியோர், இந்தித் திணிப்பைக் கண்டித்தும், தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும் உரை நிகழ்த்தினார்கள்.

இறுதியாகத் தோழர் மு. கருணாநிதி எம்.எல் ஏ. அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், தற்கால அரசியல் நிலைமை குறித்தும், சட்டசபை நடவடிக்கைகளை விளக்கியும், இன்றைய ஆட்சியாளர்களின் போக்கினை வன்மையாகக் கண்டித்தும், பல புள்ளிவிவர மேற்கோள்களுடன் அரிய உரை நிகழ்த்தினார். (பேச்சு முழுவிவரம் தனியே வரும்.)

தோழர் கருணாநிதி அவர்களுக்கு, இராயப்பேட்டை அயர்ன் பிராஸ் இண்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்கள் சார்பிலும், சாமி படிப்பகத்தின் சார்பிலும் கைத்தறியாடைகள் அணிவிக்கப்பட்டன.

இறுதியாக நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

கூட்டம் நடந்த இடம் ஒர்முடுக்காக இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரவு 10 மணிக்கு, தோழர்கள் இளம்பரிதி, பி. கே. கோவிந்தன் குழுவினரால் 'வாழட்டும்' என்னும் நாடகம் நடிக்கப்பெற்றது.

அன்று காலை 9 மணிக்கு மேற்படி படிப்பகப் பணிமனையில் தோழர் பி. கே. கோவிந்தன் தலைமையில் தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்களால் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. தோழர்கள் ஆ. வெ. செயராமன், மா. வே. இளங்கோ, சு. இராமலிங்கம், மு. வரதராசன், அ. க. இளஞ்செழியன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசிய பின் தோழியர் அலமேலு-அப்பாதுரை அரிய விரிவுரையாற்றினார்.

பிற்பகல் 1 மணிக்கு தோழியர் பூபதி அம்மையாரால் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது.

புதுடில்லி, டிச. 10—

"இப்போது இந்திய ரூபாய்க்கு உள்ள மதிப்பைப் பாதுகாக்க இந்திய அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது" என்று, உதவி நிதி அமைச்சர் பகத் மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் க. அன்பழகன் எம். எல். ஏ. சுற்றுப்பயணம்

★

கல்லூரி சிறப்புக் கூட்டம்

22—11—57 மாலை 5 மணிக்கு சேலம் நகராண்மைக் கழகக் கல்லூரியில் தமிழ்க்கழகச் சார்பில் ஓர் சிறப்புக்கூட்டம் பேராசிரியை அ. காமாட்சி அம்மையார் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 'மொழியும் வாழ்வும்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில், மொழியும் வாழ்வும் ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புடையது என்பது பற்றியும், தமிழ் மொழியின் சிறப்பு குறித்தும், தமிழ் உலகில் சிறந்த மொழி என்றும், திருக்குறளின் பெருமை பற்றியும், இந்தி நுழைவால் தமிழுக்கு ஏற்படும் தீமை பற்றியும் விளக்கமாக எடுத்துக்கூறினார்.

சரக்கபிள்ளையூர்:

22—11—57 மாலை 6-30 மணிக்கு தோழர் சி. இராசு தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் உ. ச. வள்ளிநாயகம், க. அ. பழனிச்சாமி, அ. முத்து இ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் பேசியபின் தோழர் க. அன்பழகன் சட்டசபை நிகழ்ச்சிகளையும், இன்றைய அரசியல் நிலைமைகளையும் விளக்கிப் பேசினார்; அவருக்கு சுற்றுப்புற கிளைக்கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன; தோழர் ப. பழனியப்பன் நன்றி கூறினார்.

செயலாளர் ப. பழனியப்பன் அவர்களின் பெண் மகவுக்கு அன்பழகன் அவர்களால் 'மணிமேகலை' என்று பெரியபட்டது.

இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

கடத்தூர்:

23—11—57 மாலை 4-30 மணிக்கு தோழர் டி. கந்தசாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பி. வி. ரங்கசாமி கொடியேற்றினார்; தோழர் கே. பழனி வரவேற்பிதழ் வாசித்தளித்தார்; தோழர்கள் இரா. சகநாதன், புதுமைவாணன், சிற்றுளி சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் பேசிய பின் தோழர் க. அன்பழகன் அரசியல் நிலைமைகளைப் பற்றி விளக்கிப் பேசினார்; அவருக்கு பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

வெங்கடசமுத்திரம்:

23—11—57 மாலை 6-30 மணிக்கு அழகிரிதிடலில் தோழர் ஏ. விருத்தாசலம் தலைமையில் தி. மு. கழகத் துவக்கவிழா நடைபெற்றது; ஈ. ஆர். கிருஷ்ணன் கழகக் கொடி ஏற்றினார். தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் அண்ணா படிப்பகத்தைத் திறந்துவைத்தார். தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து, 'தி. மு. கழகமும், இன்றைய அரசியலும்' என்பது பற்றிப் பேசினார்: அவருக்குப் பல கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பூலாவரி:

24—11—57 மாலை 5-30 மணிக்கு தோழர் கே.எஸ். அமுர்தம் தலைமையில் தி. மு. கழகத் துவக்கவிழாக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் உரைக்குப்பின் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் சிறிது நேரம் பேசினார். பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்துஉரை நிகழ்த்தினார்; அவருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. செயலாளர் சின்னப்பன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் தோழர் ஆறுமுகம் அவர்களின் ஆண் மகவுக்கு 'நெடுஞ்செழியன்' என்றும், தோழர் இராமசாமியின் ஆண் மகவுக்கு 'வெற்றிவீரன்' என்றும் அன்பழகன் அவர்களால் பெயரிடப்பட்டது.

இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

உத்தமசோழபுரம்:

24—11—57 மாலை 6-30 மணிக்கு தோழர் பி. கிருஷ்ணன் தலைமையில் தி.மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தலைவர் உரைக்குப்பின் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகக் கொடியை ஏற்றிவைத்து கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்; பின்னர் தோழர் கே. எஸ். அமுர்தம் சிறிது நேரம் பேசினார்; அடுத்து தோழர் க. அன்பழகன் தி. மு. கழகத்தைத் துவக்கி வைத்துக் கழக இலட்சியத்தை விளக்கிப் பேசினார். அவருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் இராமமூர்த்தி நன்றி கூறினார்.

ஆட்டையாம்பட்டி:

24—11—57 இரவு 8-30 மணிக்கு தோழர் கே. கே. சாமி தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். பின்னர் தோழர் அன்பழகன் அவர்கள் கழகக் கொள்கைகளையும், சட்டசபை நிகழ்ச்சிகளையும் விளக்கி உரையாற்றினார். அவருக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சேலம் மாவட்ட [illegible]
நிகழ்ச்சிகளில் [illegible]
பழகன் [illegible]
கள் [illegible]

கிராமக் கடன் வசதிகள்

இந்தியப் பேரரசு பலவழிகளை ஆராய்கிறதாம்!

புதுடில்லி, டிச. 10—

அகில இந்திய கிராமக் கடன் குழு முடிவுகளின்படி மாநிலப் பாங்கிகள் எவ்வளவு கடன் வசதி அளித்திருக்கிறது என்று மக்கள் சபையில் கேட்கப்பட்டபோது, 'அவ்வசதிகள் அளிப்பதுபற்றி பலவழிகளை இந்திய சர்க்கார் ஆராய்ந்துவருகிறது' என்று நிதி அமைச்சர் பதிலளித்துள்ளார்.

அஞ்சல் ஊழியர்களுக்கு பண்டித[illegible] கொடுத்த வாக்குறுதி எங்[illegible]?

மீண்டும் சனவரியில் [illegible]

கடந்த ஆகஸ்டு திங்களில் அகில [illegible] வறி ஊழியர் வேலைநிறுத்தம் மேற்கொள[illegible] நிவாரணம் அளிப்பது பற்றி பண்டித நேரு அ[illegible] நிறைவேற்றுததின் விளைவு மீண்டும் சனவரியி[illegible] நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகிவருகி[illegible]

"உடனடியாக இடைக்கால நிவாரணம் தரப்படாவிட்டால், மீண்டும் பொது வேலைநிறுத்தம் செய்ய நேரிடும்" என்று, பம்பாயில் கூடியுள்ள அஞ்சல், தொலைபுறி ஊழியர் மாநாடு

எச்சரித[illegible]
பண[illegible]
குறி[illegible]
புள்[illegible]
தான[illegible]

கம்யூனிஸ்டுகளுக்கு அண்ணா பதில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

னபர்கூட...அவர் உணராமல், அவர் அன்றையத் தினம் வரவில்லை. வாராததுமட்டுமல்ல— கமிட்டியிலிருந்து தான் இராஜிநாமா செய்வதாகவும் சொல்லிவிட்டார். சட்டசபைத் தலைவர் கொஞ்சம் அவசர முடிவு செய்பக்கூடியவராக இருந்தால் இராஜிநாமாவை ஏற்றுக்கொண்டிருப்பார். அவரை, இதுதான் சமயம் என்று விரட்டக்கூடிய அந்த அற்பப் புத்தியும் எங்களுக்கு இல்லை.

"நான்தான், தோழர் கல்யாணசுந்தரம் அவர்களிடம் சென்று, இராஜிநாமாவை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டேன்; 'நீங்கள் சொல்லிப் பயனில்லை; தலைவர் சொல்லவேண்டும்; அவர் கொஞ்சம் ஜாடையாகச் சொன்னாலும் நான் வாபஸ் வாங்கிக்கொள்ளலாம்' என்றார்; அதன்பிறகு நான், தலைவருக்கு அதை ஜாடையாகக் காட்டி, தலைவரும் ஜாடையாகக் கூறி, அதன் பிறகு அவர் வாபஸ் வாங்கிக்கொண்டார். பதவிக்கு வந்த ஆபத்து எப்படிக் காப்பாற்றப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட அல்ல, நான் இதை இங்கு குறிப்பிட வந்தது; பிரச்சினைகள் வரும்போது பொறுப்புணர்ச்சியை அலட்சியப்படுத்திவிட்டுப் போய் விடப் பார்த்தார் என்பதை எடுத்துக்காட்டத்தான் இதை நான் இங்கு குறிப்பிட்டேன்.

அன்றையக் கமிட்டியில் சோஷலிஸ்டுக் கட்சியைச் சார்ந்த தோழர் நல்லசிவம் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்துத்தான் பேசப்பட்டது. 'அந்தத் தீர்மானத்தை விவாதித்தால் போதும்; ஓட்டெடுக்கத் தேவையில்லை' என்று முடிவு செய்யப்பட்டு, 'முதுகுளத்தூர் பற்றி விவாதித்துவிட்டால் போதுமானது' என்ற அந்த முடிவை, சோஷலிஸ்டுத் தலைவர் பக்கிரிசாமிப் பிள்ளையும் ஒப்புக்கொண்டார்; எனவே, அந்தத் தீர்மானம் வாபஸ் வாங்கப்பட்டது.

"ஒரு சினிமாக் கொட்டகையில் 'புதுமைப்பித்தன்' நடப்பதாக வெளியே விளம்பரப்படுத்தப்பட்டு 'மர்மவீரன்' படம் காட்டப்பட்டால் என்ன அர்த்தம்? பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி உள்ளே நுழைந்தவன் என்ன செய்வான்? 'புதுமைப்பித்தன்' பார்க்கலாம் என்று வந்தால் மர்மவீரன் காட்டுகிறார்களே—என்று ஆத்திரப்படுவான்; 'பணத்தை வாபஸ் செய்' என்று கேட்பான். 'ஏதோ வந்துவிட்டோம்; ஏதாவது ஒரு சனியனைப் பார்த்துவிட்டுத்தான் போவோமே' என்று எண்ணுபவன், காட்டுகிற படம் எதுவானாலும் பார்த்துவிட்டுச் செல்வான்.

"அதே முறையிலேதான் 'வலியுறுத்தப்படக் கூடாது' என்று நாங்கள் வரையறுத்துக் கொண்டிருந்த முடிவுக்குமாறாக மறுநாள் சட்ட சபையில் நடம் ... செய்த முடிவுப் ...ல்லாத் தீர் ...ம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திடீரெனக் கொண்டு வந்திருக்கிறார். அந்தநேரத்தில், தி. மு. க. தலைவனான நான் இல்லையே என்று நம் உறுப்பினர்கள் யோசித்தார்கள்; நம் கழகத் தோழர்களுக்கு இருக்கும் இயற்கையான அறிவுக்கூர்மையும், கடமையுணர்ச்சியும் அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக அவர்களை எழுந்து நிற்கச் செய்தன; உடனே, சபை, அந்தத் தீர்மானத்தை ஏற்றது.

"இதையெல்லாம் நான் மனந்திறந்துபேச நேர்ந்தமைக்கு, கம்யூனிஸ்டுத் தோழர்கள் மன்னிக்க வேண்டும்.

'கம்யூனிஸ்டுக்காரர்கள் பற்றிப் போதுவாக உலக முழுவதிலுமே ஒரு கெட்ட பெயர் இருந்துவருகிறது; 'யார் அவர்களை நம்பினாலும், பாதி வழியில் அவர்கள் விட்டுவிடுவார்கள்' என்பதுதான் அந்தப் பெயர்; நான் தோழர் கல்யாணசுந்தரத்துக்குச் சொல்லிக்கொள்கிறேன்—அந்த வித்தை எனக்கும் தெரியும்; உங்களோடு எவ்வளவு தூரம் வரவேண்டும்—எந்த நேரத்தில் வரவேண்டும்—உங்களை விட்டு விட்டுத் திரும்பிவரும் நேரம் எது என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்; நான் தீர்மானித்திருப்பது என்ன என்பதை நீங்கள் யூகிக்கக்கூட முடியாது.

"கம்யூனிஸ்டுகள் எல்லா கார்டையும் திறந்துகாட்டுவதில்லை; ஒரு கார்டைத் திறந்தும் இன்னொரு கார்டை மூடி மறைத்தும் காட்டினால், நான் ஒரு கார்டைக்கூட அவர்களுக்குக் காட்டமாட்டேன். அதுமட்டுமல்ல; என்னிடம் எத்தனைக் கார்டுகள் இருக்கின்றன என்பதைக்கூட அவர்களால் கண்டுபிடிக்க முடியாது.

"நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் உள்ள வாசகங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று ஓட்டெடுக்கும் முன்புகூடக் கேட்டேன்; தோழர் கல்யாணசுந்தரம் மாற்றிக்கொள்ளவில்லை. எல்லோரும் நான் சொல்லும் இந்த வாசகங்களை நன்றாகக் கவனிக்க வேண்டும்—'காமராஜ நாடார் தலைமையில் இயங்கும் இந்த மந்திரிசபை மீது நம்பிக்கையில்லை'—என்ற வாசகத்தை அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சேர்த்திருந்தார் தோழர் கல்யாணசுந்தரம்; நான்—'இந்த மந்திரிசபைமீது நம்பிக்கையில்லை' என்று பொதுவாக இருந்தால் போதும்; 'காமராஜ நாடார் தலைமையில் இயங்கும்' என்ற அடைமொழி வேண்டாம—என்று சொன்னேன். ஏனென்றால், 'காமராசர் தலைமையில் இல்லாமல் வெங்கட்ராமன் தலைமையிலோ, பக்தவத்சலம் தலைமையிலோ, சி. சுப்பிரமணியம் தலைமையிலோ இந்த மந்திரிசபை இயங்கினால், நம்பிக்கை உண்டு என்பதுபோன்ற பல்வேறுமாதிரியாக அர்த்தம் கொடுக்கும்' என்று சொன்னேன்; ஆனாலும், அவர் என் பேச்சைக் கேட்கவில்லை; 'இல்லை, இல்லை; காமராஜ நாடார் தலைமையில் இயங்கும் மந்திரிசபை என்று இருப்பதுதான் சரி' என்று அவர் கூறிவிட்டார்; 'அப்படியானால் சரி; உங்களுக்குக் காமராசர்மீது மட்டும் கோபமிருக்கலாம்; எனக்காகக் கோபம் வந்தால் பார்த்துக் கொள்ளலாம். இரவல் கோபம் எனக்கு வேண்டாம்' என்று கூறிவிட்டேன். கடைசி விநாடிவரை வாதாடினேன். முதுகுளத்தூர் சம்பவங்களுக்குக் காரணம், காமராஜ நாடாரும், பக்தவத்சலமும தான் என்று அவர்கள் பன்னிப் பன்னிச் சொன்னார்கள்; கக்கனை நீக்கிவிட்டுத்தான் சொன்னார்கள். ஒருவேளை ஆதித்திராவிட மக்களின் மனம் புண்பட்டுவிடுமோ—அவர்கள் ஆதரவை எங்கே இழந்துவிடுவோமோ என்ற அச்சததால் கக்கன் பெயரை விட்டுவிட்டார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது!

"ஆங்கிலத்தில் இப்பொழுதுள்ள இந்த ஆட்சி முறைககு 'காபினட் (Cabinet) முறை' என்று பெயர். மந்திரி சபை கூட்டுப் பொறுப்பில் இயங்குவது. ஒரு மந்திரி நல்லது செய்தால் அது மற்ற எல்லா மந்திரிகளையும் சாரும். அதேபோல, ஒரு மந்திரி கெட்டது செய்தாலும மற்ற மந்திரிகளுக்கும அதிலே பங்குண்டு. ஒரு மந்திரி எடுக்கும முடிவு மந்திரி சபையே எடுத்த முடிவுபோலத்தான் கருதப்படும். எனவே, இரண்டு மந்திரிகளை மட்டும் குறிப்பிடுவது அரசியல் நாகரிகத்துக்கு அழகல்ல; எனவே, நாங்கள் உங்களோடு வரவில்லை. இதில் என்ன தவறு?

"அடுத்தபடியாக, பெரியாரை அடக்க வேண்டுமென்று பெருமுயற்சிசெய்து ஒரு மசோதாவை சர்க்கார் கொண்டுவந்தார்கள். உண்மையிலேயே நாங்கள் காமராசர் கையாளாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்; அதை ஆதரித்திருக்க வேண்டும்; அல்லது, வோட்டெடுப்பின் போது வெளிநடப்புச்செய்திருக்க வேண்டும்.

"150 காங்கிரஸ்காரர்கள், 4 கம்யூனிஸ்டுக்காரர்கள், 20 ஜனநாயகக் காங்கிரஸ்காரர்கள் மற்றும், சோஷலிஸ்டுகள், பிரஜா சோஷலிஸ்டுகள், சுயேச்சைகள் அத்தனைப்பேரும் சேர்ந்து வலியுறுத்தினார்கள், அந்த மசோதாவை! ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு அந்த மசோதாவை ஆதரித்துப் பேசினார்கள்! பக்தவத்சலம், 'சட்ட புத்தகத்தை எரிப்பவர்களுக்கு 3 ஆண்டு தண்டனை கொடுக்க வேண்டும்' என்றார்; கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பழனிசசாமி, 'மூன்றாண்டுதானா? அது போதாது' என்றார்; பக்தவத்சலம், பெரியாரை, 'பைத்தியம்' என்றார்; பழனிச்சாமி, அதற்கு ஒப்புதலளித்துப் பேசினார். தி. மு. கழகம் ஒன்றுதான் துணிந்து அந்த மசோதாவை எதிர்த்தது-ஆதரிக்கவில்லை; எதிர்ப்பதனால், பெரியாரின் பேராதரவைப் பெற்றுவிட முடியாது என்பதைத் தெரிந்தும், துணிந்தே அதை எதிர்த்தது; நாங்கள் காமராசர் கையாட்களா என்று கேட்கிறேன்.

"இந்த மசோதா சபைக்கு வருமுன், அலுவல் கமிட்டியிலே, 'இந்த மசோதாவை விவாதிப்பதற்காக எத்தனை மணி நேரம் ஒதுக்குவது' என்று யோசித்தபோது நான், 'ஒருநாள் வேண்டும்' என்றேன்; அப்பொழுது தோழர் கல்யாணசுந்தரம், 'இதற்கு ஏன் இவ்வளவு நேரம்? 10 நிமிடம் போதும்-15 நிமிடம் போதும்' என்றெல்லாம் வாதாடினார்; 'இதில் என்ன இருக்கிறது விவாதிக்க; மந்திரி வாயால் வாசிப்பார்; அதை நாம், சரிசரி என்று ஒத்துக்கொள்ளப்போகிறோம்; இவ்வளவு தானே?'—என்று சொன்னார்.

"'நேற்றுவரை, குற்றம் என்று கருதப்படாத சில காரியங்களை இன்று குற்றம் என்று சொல்லக்கூடிய மசோதாவாக இது இருக்கிறது; இதற்கு 10 நிமிடமெல்லாம் போதாது' என்று நான் சொன்ன நேரத்தில், தோழர் கல்யாணசுந்தரம், '10 நிமிடம் போதும்' என்றார்; அவர்தான் காமராசருக்கு ஆதரவாக நடந்துகொண்டார்' அவர் காமராசரின் கையாளா, நாங்கள் கையாட்களா என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

"திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கும், எப்பொழுதும் கையாளாகாது அதனிடத்திலே சில திட்டவட்டமான கொள்கைகள் இருக்கின்றன. யார் அதை மிரட்டினாலும் மிரட்டும்போது அது மிரள்வதில்லை; ஆசைகாட்டும் போது அதிலே அது மயங்கி விடுவதுமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பு:— அடுத்து, அண்ணா அவர்கள், தி. க. — தி. மு. க. இணைவதுபற்றி வெளியான செய்தி குறித்தும், நேருவின் பேச்சு குறித்தும் பேசியதன் விவரம் தொடர்ந்து பின்னர் வெளிவரும்.

சட்டக் கல்லூரி தி.மு.க.-மாணவர்கிளை துவக்கவிழா

13—12—57 மாலை 6 மணிக்கு சென்னை கோகலேமண்டபத்தில்

தலைவர்: வை. சுந்தரமூர்த்தி

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
கே. ஏ. மதியழகன் (ஆங்கிலத்தில்)
தில்லை-வில் லாளன்
டி. கே. பொன்னுவேலு

கட்டணம் இல்லை

க. அன்பழகன் எம்.எல்.ஏ.

சென்னை, டிச. 11—

தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் தேவகோட்டை இராஜசிங்கமங்கலம் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்றிருந்த நேரத்தில், வயிற்றுவலியால் உடல்நிலைக் கோளாறு ஏற்பட்டு, டாக்டரின் ஆலோசனைக்கேற்ப தான் கலந்துகொள்ள இருந்த மற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் ஒத்திவைத்துவிட்டு, இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார். இன்னும் ஒரு வார காலத்துக்கு முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாமற் போனதற்கு வருந்துவதாகவும், உடல்நிலை சீர்படும்வரை வெளியூர்த் தோழர்கள் பொறுத்தருள வேண்டுமென்றும் தோழர் அன்பழகன் கேட்டுக்கொள்கிறார்.

கே.வி.கே. சாமி நினைவு நாள் —இந்தி எதிர்ப்பு நாள் பொதுக்கூட்டம்

13—12—57 மாலை 6 மணிக்கு கிரனூர் தி. மு. கழகச் சார்பில், என். எஸ். கே. திடலில், தோழர் சி. வெங்கிடுசாமி தலைமையில், மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, கு. மாரியப்பன், அ. சலாவுதீன் ஆகியோர் பேசுவர்.

'விமலா'—நாடகம்

13—12—57இரவு 10 மணிக்கு சேலம் தாலுகா அக்ராகார நாட்டமங்கலம் கிராமம்—எலக்டிரிக் தியேட்டரில், தி.மு. கழகக் கட்டிட நிதிக்காகவும், எஸ். இருசப்பன் நினைவு வாசகசாலை கட்டிட நிதிக்காகவும், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையில் சேலம் கலைவாணர் நாடக சபையாரால் 'விமலா அல்லது விதவையின் கண்ணீர்' என்ற நாடகம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

12—12—57 இரவு 8 மணியளவில் சென்னை 47-வது வட்ட தி. மு. க. சார்பில், 'தியாகராய மன்றத்'தில், தோழர் ஆ. சா. நடராசன் தலைமையில் 'மேடைப் பேச்சு' எனும் தலைப்பில் கழகத் தோழர்களும், மன்ற உறுப்பினர்களும் பேசுவர்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு

டிசம்பர் 27, 28-ம் நாட்களில்
நாகர்கோயிலில் நடைபெறும்

டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்
...கி. சம்பத்
...மை தாங்குகிறார்.

மதுரை—டாக்டர்
ஏ. அருணாசலம்
அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

...ணா, போதச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன்
... இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

...லும் இசை அரங்கு - நாடகம் ஆகியவை உண்டு

—வரவேற்புக் குழு

திராவிட முன்னேற்றக் கழகத் ...க்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களா... அழகிரி அச்சகத்தில் அச்சிட... பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெ... பத்து. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.